பக்கங்கள்:-18

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆவணி 22 | புதன்கிழமை | 06.09.2023 | அதிர்வு 36

## திருமலை விபத்தில் இளைஞர் உயிரிழப்பு

திருகோணமலை, ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆணைத்தீவு பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந் துள்ளார்.

இந்த விபத்து நேற்று மாலை 02

# உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்; சர்வதேச விசாரணை மிக அவசியம்

## நாடாளுமன்றில் சஜித் இடித்துரைப்பு



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பின்னணியிலுள்ள சூத்திரதாரிகளைக் கண்டறிய சர்வதேச விசாரணை மிகவும் அவசியம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட கூற்று ஒன்றை முன்வைதது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். 02


# 'சனல் 4' வீடியோவின் பின்னணியில் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களாம்!

## சிங்கள ஊடகத்தில் இப்படிச் செய்தி

இலங்கையில் நான்கு வருடங்களுக்கு முன்னர் நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் பிரிட்டனின் "சனல் 4" ஊடகம் வெளியிட்டுள்ள ஆவணப்படத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களின் பின்னணியில், புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் செயற்பட்டுள்ளன என்று கொழும்பின் சிங்கள ஊடகமான "அத" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் நான்கு வருடங்களுக்கு முன்னர் 275 இற்கும் அதிகமானவர்கள் கொல்லப்படுவதற்குக் காரணமாக இருந்த உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பின்னணியில் 02

# ராஜபக்ஷக்களும் பிள்ளையானும் உடன் கைதுசெய்யப்பட வேண்டும்



## சபையில் கஜேந்திரன் எம்.பி. வலியுறுத்து

"ராஜபக்ஷக்கள் மற்றும் பிள்ளையான் போன்றவர்கள் உடனடியாகக் கைதுசெய்யப்பட வேண்டும்."

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள்முன்னணியின்பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் கோரிக்கை விடுத்தார்.

அத்துடன் இவர்களுக்கு எதிராக சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். 09

## பரந்துபட்ட அரசியல் கூட்டணியை உருவாக்கச் சஜித் குழு தீவிர பேச்சு


ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் பரந்துபட்ட அரசியல் கூட்டணியொன்றை உருவாக்கும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

அதன் பிரகாரம் நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சிகளை ஓரணியில் இணைத்து பரந்தப்பட்ட அரசியல் கூட்டணியொன்றை உருவாக்க எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பல்வேறு கட்சித் தலைவர்களுடன் பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்றார்.

எதிர்க்கட்சிகளின் விசேட பேச்சு நேற்றுமுன்தினம் சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெற்றது.

தற்போதைய அரசியல் சூழ்நிலை மற்றும் நாடு எதிர்நோக்கும் சவால்கள் குறித்து இதன்போது 02

## இரகசியம்



தெற்கு அரசியலில் பெரும் பிரளயத்தைக் கிளப்பி விட்டிருக்கின்றார் பிள்ளையானின் செயலாளராக முன்னர் இருந்த ஆஸாத் மௌலானா.

பல தமிழ் ஊடகத் தரப்புகளும் இப்போது அவரைத் தேடித் திரிகின்றன. அவருடனான தொலைபேசி 03

# உயர்தரப் பரீட்சைகளை ஒத்திவைக்க முடியாது!

## கல்வி அமைச்சர் திட்டவட்டம்



ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை (2023) ஒத்தி வைக்கப்பட்டால் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை மற்றும் 2024 ஆம் ஆண்டுக்கான பாடசாலை பாடத்திட்டத்தின் நிறைவு பாதிக்கப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக உயர்தரப் பரீட்சைகளை ஒத்திவைக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சைகளை ஒத்திவைக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, டலஸ் அழகப்பெரும, விமல் வீரவன்ஸ, சரத் வீரசேகர உள்ளிட்ட அரச மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், உயர்தரப் பரீட்சைகள் திட்டமிட்டபடி நடைபெறும் எனவும் அமைச்சர் நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

இந்நிலையில் தேர்வுகளை மீண்டும் எதிர்பார்க்கும் மாணவர்களுக்கு இது நியாயமற்றது எனவும், மீண்டும் தேர்வுக்கு வரும் மாணவர்களுக்கு தேர்வுக்குத் தயாராகும் நேரம் போதுமானதாக இல்லை எனவும் மேற்படி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### திருமலை விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இடம்பெற்றுள்ளது.

விபத்தில் வெருகல் – இலங்கை துறைமுகத்துவாரத்தைச் சேர்ந்த சந்திரராஜ் கஜேந்திரராஜ் (வயது 21) என்பவரே உயிரிழந்துள்ளார்.

வெருகல் கோயிலில் விசேட வழிபாட்டுக்குத் தனது தாய் மற்றும் தம்பி ஆகியோரைக் கோயிலுக்கு மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு சென்று மீண்டும் வீடு திரும்பும் போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளது என்று பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணை மூலம் தெரிய வந்துள்ளது.

உயிரிழந்த இளைஞரின் சடலம் ஈச்சிலம்பற்று பிரதேச வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பில் ஈச்சிலம்பற்று பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### ‘சனல் 4’ வீடியோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ராஜபக்ஷக்களுக்கு விசுவாசமாகச் செயற்பட்டவர்கள் இருந்தனர் என்று "சனல் 4" வெளியிட்டுள்ள ஆவணப்படத்தில் கூறப்பட்டுள்ளது.

பல வருடங்கள் ராஜபக்ஷக்களின் விசுவாசியாக இருக்கும் பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனின் உதவியாளராக இருக்கும், ஹன்சீர் அஸாத் மௌலானா என்பவர் வழங்கிய சாட்சியங்களின் அடிப்படையில் இந்த ஆவணப்படம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், அஸாத் மௌலானாவுக்குச் சுவிட்சர்லாந்தில் அகதி அந்தஸ்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில், அரச அதிகாரிகள் மீது குற்றம் சுமத்தி, திட்டமிட்ட வாக்குமூலத்தைப் பெற்றுக்கொள்வதற்குப் பிரிட்டன் தமிழர் பேரவை உள்ளிட்ட அமைப்புக்கள் ஒத்துழைப்பு வழங்கியுள்ளன எனவும் "அத" பத்திரிகை செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி குறித்த காணொலி சனல் 4 அலைவரிசையில் ஒளிபரப்புவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அரச புலனாய்வுப் பிரிவின் பிரதானி மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே, தனது சட்டத்தரணி ஊடாக விடுத்த வேண்டுகோளுக்கு அமைய அந்த ஒளிபரப்பு பிற்போடப்பட்டது எனவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கும், சுரேஷ் சலேவுக்கும் இடையிலான தொடர்பு குறித்து அஸாத் மௌலானா வெளிப்படுத்தியுள்ள அனைத்து விடயங்களும் உண்மைக்குப் புறம்பானவை எனவும், மௌலானா குறிப்பிடும் காலப்பகுதியில் மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே சேவையில் இருக்கவில்லை எனவும், இதனை சுரேஷ் சலே ஆவணங்களுடன் சனல் 4 இற்கு தெளிவுபடுத்தியுள்ளார் எனவும் குறித்த அத பத்திரிகை செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### பரந்துபட்ட அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விரிவாக ஆராயப்பட்டது. அத்துடன் எதிர்காலத்தில் எதிர்க்கட்சிகளின் பரந்த அரசியல் கூட்டணியைக் கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியம் குறித்தும் இங்கு அவதானம் செலுத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட இலங்கை மக்கள் கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அசங்க நவரத்ன உள்ளிட்ட அக்கட்சியின் பிரதிநிதிகள் குழுவினரும், எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளுடனும் கலந்துரையாடல்களை நடத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

எதிர்காலத்தில் இந்தக் கலந்துரையாடல்களை நடத்துவதன் முக்கியத்துவத்தையும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

பரந்துபட்ட கூட்டணியை உருவாக்க ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு எடுத்த தீர்மானங்களின் பிரகாரம், எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளுடனும் தொடர்ந்தும் பேச்சு நடத்தப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இந்தச் சந்திப்பில் சுட்டிக்காட்டியமையுடன், இவ்வாறான ஒரு பரந்த கூட்டணியில் இணையுமாறு இலங்கை மக்கள் கட்சிக்கு அழைப்பும் விடுத்தார்.

இந்தச் சந்திப்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் இலங்கை மக்கள் கட்சியின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

### உயிர்த்த ஞாயிறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:–

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்குப் பொறுப்பானவர்களைக் கண்டறிய வெளிநாட்டு ஆலோசனை தேவையா? அதனைச் செய்யுமாறு வெளிநாட்டு ஊடகம்தான் வலியுறுத்த வேண்டுமா? அதற்கான பொறுப்பு அதிகாரிகளுக்கு இல்லையா? எமது நாட்டின் ஆட்சியாளர்களுக்கு மனசாட்சி இல்லையா? உண்மைகளைக் கண்டறியவும், உண்மையைப் பேசவும் எமது நாட்டு அரசியல்வாதிகளுக்குப் பொறுப்பில்லையா?

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது பேராயர் கர்தினால் எனக்கு எதிராக வாக்களிக்குமாறு கூறியதற்கு நான் கவலைப்படவில்லை. அவர் தமது மனதுக்குள் இருந்த கவலை காரணமாக அவ்வாறு கூறியிருந்தால் நான் அதற்காகக் கவலைப்படப்போவதில்லை.

கிறிஸ்தவ மக்களுக்கு இந்தக் கவலை இன்னமும் உள்ளது. எமது நாட்டின் உள்ளக விசாரணைகளின் ஊடாக உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பின்னணியிலுள்ள பிரதான சூத்திரதாரிகளைக் கண்டறிய முடியாது. இது தொடர்பாக முறையான சர்வதேச விசாரணை மிகவும் அவசியமாகும்." – என்றார்.

# ஐ.நாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி யாழ். நகரில் பல்வேறு சந்திப்புகளில்!







ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே பிராஞ் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை விஜயம் செய்தமையுடன் நேற்றும் செவ்வாய்க்கிழமை பல்வேறுபட்ட சந்திப்புகளில் ஈடுபட்டார்.

ஐக்கிய நாடுகளின் வதிவிடப்பிரதிநிதிக்கும் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரனுக்கும் இடையிலான – யாழ்ப்பாண மாவட்டத்தின் தற்போதைய நிலைமை தொடர்பான – விரிவான கலந்துரையாடல் நேற்றைய தினம் காலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், உதவி மாவட்ட செயலாளர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் ஐக்கிய நாடுகளின் வதிவிட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

ஐக்கிய நாடுகளின் வதிவிடப்பிரதிநிதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்து பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜாவை சந்தித்தார்.

யாழ்ப்பாணம் கோட்டைக்கு விஜயம் செய்த ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி அங்கிருந்து யாழ் நகரத்தின் அழகைப் பார்வையிட்டார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உரையாடல்கள், கருத்துக்கள் சில இணைய ஊடகங்களில் ஒளி/ ஒலி பரப்பாகின்றன.

தான் சில உண்மைகளை அம்பலப்படுத்தி விடுவேன் என்ற அச்சத்தில் – ஆத்திரத்தில் – தன்னைக் கொல்லச் சதி நடந்ததாகவும், விடயம் விவகாரமானதை அடுத்துத் தான் உடனே இந்தியாவுக்குத் தப்பி, பின் அங்கிருந்து மேற்கு நாடுகளுக்கு வந்து சேர்ந்தார் எனவும் அவர் கூறுகின்றார்.

ஈஸ்டர் குண்டு தாக்குதல் சூத்திரதாரிகள் – பிள்ளையான் – படை அதிகாரி சுரேஷ் சலே ஆகிய முத்தரப்புகளுக்கு இடையிலான தொடர்புகள் என்று ஆஸாத் மௌலானா போட்ட முடிச்சு தெற்கு அரசியலை ஒரு கலக்குக் கலக்கி விட்டுத்தான் ஓயும் என்று தெரிகின்றது.

இந்த விடயத்தை ஒட்டி சில உள்வீட்டுத் தகவல்களும் உண்டு.

ஒன்று – ஆஸாத் மௌலானா சுவிஸில் அரசியல் தஞ்சம் புகுந்திருக்கின்றார் என்றுதான் கதைகள் வெளியாகின. அவை உண்மையல்ல. சுவிஸின் எல்லையை அண்டிய பிரான்ஸ் நிலப்பரப்பிலேயே அவர் அரசியல் தஞ்சம் பெற்றிருக்கின்றார். பிரான்ஸ் தான் அவரது புகலிடம்.

இரண்டு – இந்த விடயத்தை ஒட்டிய விவரங்களை மேலும் துருவுவதற்காக 'சனல்–4' புலனாய்வுக் குழு ஒன்று சில மாதங்களுக்கு முன் சத்தம் சந்தடியின்றி இலங்கைக்கு இரகசிய விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தது. அது குறித்து கொழும்பில் சில அரசியல்வாதிகளுக்குத் தெரிந்தும் இருந்தது.

மூன்று – ஆஸாத் மௌலானாவின் வாக்குமூலம் ஊடாக, 'சனல் 4' மூலம் தெற்கில் பெரும் அரசியல் குண்டு ஒன்று வெடிக்கும் என்ற தகவலும் கூட அந்த அரசியல்வாதிகளுக்குத் தெரிந்திருந்தது. அதற்கான நாளை அவர்கள் ஆவலுடன் எதிர்பார்த்தும் இருந்தார்கள் என்றும் தெரிகின்றது.

நான்கு – இன்னொரு முக்கிய விடயம். இப்போது சர்ச்சையில் சிக்கி இருக்கும் படைப் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளராக இருந்த மேஜர் ஜெனரல் சுரேஷ் சலேதான் பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டாபயவுக்கு அப்போது வலது கை, இடது கை, அல்லக்கை எல்லாமே. அதனால்தான் இந்த குற்றச்சாட்டுச் சர்சையில் தொப்பி கோட்டாபயவுக்குக் கனகச்சிதமாக பொருந்துகின்றது.

\+ + +

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தொடர் வரும் 11 ஆம் திகதி தொடங்குகின்றது. அதில் இலங்கை தொடர்பான தனது அவதான அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் சமர்ப்பிக்கவிருக்கின்றது அல்லவா?

அந்த அறிக்கையின் முதல் பிரதியை இன்று கொழும்பு அரசுக்கு ஆணையாளர் அலுவலகம் கையளிக்க இருக்கின்றது. அறிக்கையில் வழமையான விடயங்களுக்கு மேலதிகமாக மூன்று விடயங்கள் முக்கியமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன என்று தெரிகின்றது.

ஒன்று – தேர்தல் நடத்தப்படாமை, ஜனநாயகக் கோட்பாடுகளுக்கான இடைவெளி மறுக்கப்படுகின்றமை போன்றவை குறித்து அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அடுத்தது – ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் கடந்த ஆண்டு இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட எந்தப் பரிந்துரையையும் நிறைவேற்றுவதற்கான முன் முயற்சிகள், நகர்வுகள் இலங்கையில் மேற்கொள்ளப்படவே இல்லை என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது – யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை மனிதஉரிமைகள் மீறப்பட்ட விடயங்கள் தொடர்பில் குற்றமிழைத்தோருக்கு எதிரான நடவடிக்கைகளை ஐ.நா. உறுப்பு நாடுகள் தத்தமது நாடுகளில் தாமதமின்றி இனி ஆரம்பிக்க வேண்டும்.

இந்த விடயங்கள் இன்று இலங்கையிடம் கையளிக்கப்பட இருக்கும் ஆணையாளர் அலுவலகத்தின் இலங்கை தொடர்பான அவதானிப்பு அறிக்கையில் இருக்கின்றன எனத் தெரிகின்றது.

இதற்கிடையில் இந்த 54 ஆவது அமர்வில் இலங்கை தொடர்பான விவகாரத்தில் எவ்வாறு செயல்படுவது என்பது குறித்து ஆராய்வதற்கான கலந்துரையாடல் ஒன்று இன்று ஜெனிவாவில் உள்ள பிரிட்டிஷ் தூதரகத்தில் இடம்பெறவுள்ளது. பிரிட்டிஷ் தரப்பு முன் முயற்சி எடுத்து அழைத்துள்ள நாடுகளின் தூதுவர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றுவர் எனத் தெரிகிறது.

இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றிக் கருத்துரைக்கவே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஜெனிவாவுக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று ஜெனிவா சென்றடைந்ததும் அங்கு ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் ஆணையாளர் இல்லாத சூழலில் பிரதி ஆணையாளர் றொவி மங்கோவனை சந்தித்து சுமார் ஒன்றரை மணி நேரம் இலங்கை விடயங்கள் குறித்து விரிவான பேச்சுகளில் ஈடுபட்டார் எனத் தெரிகின்றது.



# நல்லூரான் கார்த்திகை உற்சவ வீதியுலா

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழாவில் 16ஆம்நாள் மாலை உற்சவம்(கார்த்திகை உற்சவம்) நேற்று இடம்பெற்றது. வள்ளி,தெய்வானை சமதேராக முருகப் பெருமான் வீதியுலாவந்தார்.

படங்கள் :- பிரபாகரன் டிலக்சன்













# உண்மைகளைக் கண்டறியும் பொறிமுறை சாத்தியமில்லை

## 9 சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் கூட்டாகச் சுட்டிக்காட்டு



வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணிகளை அபகரிப்பதிலும், சிறுபான்மையின சமூகங்களுக்குச் சொந்தமான மத வணக்கத்தலங்களைக் கைப்பற்றுவதிலும் சில அரச கட்டமைப்புக்கள் முன்நின்று செயற்பட்டுவரும் நிலையில், பாதிக்கப்பட்ட சமூகத்தின் முழுமையான பங்கேற்புடன் நியாயமான விதத்தில் உண்மையைக் கண்டறியும் செயன்முறையை முன்னெடுப்பது சாத்தியமில்லை என்று 9 சர்வதேச அமைப்புக்கள் கூட்டாகச் சுட்டிக்காட்டியுள்ளன.

அரசால் முன்மொழியப்பட்டுள்ள தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஆசியப் பேரவை, சர்வதேச பிரான்சிஸ்கன்ஸ், முன்னரங்கப் பாதுகாவலர்கள், மனித உரிமைகள் கண்காணிப்பகம், சர்வதேச ஜுரர்கள் ஆணைக்குழு, மனித உரிமைகளுக்கான சர்வதேச சம்மேளனம், இலங்கை தொடர்பான சர்வதேச செயற்பாட்டுக்குழு, இலங்கை பிரசாரம் ஆகிய 9 சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் இணைந்து கூட்டறிக்கையொன்றை வெளியிட்டுள்ளன.

அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:-

“இலங்கை அரசால் முன்மொழியப்பட்டுள்ள தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் நாம் தீவிர கரிசனை கொண்டிருக்கின்றோம்.

எமது இக்கரிசனைகள் யுத்த காலத்தில் இடம்பெற்ற மீறல்களால் பாதிக்கப்பட்டோர் மற்றும் அவர்களது குடும்பத்தினரால் ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்ட கரிசனைகளைப் பிரதிபலிக்கும்.

இலங்கை இத்தகைய கட்டமைப்புக்களை உருவாக்கிய நீண்டகால வரலாற்றைக் கொண்டிருப்பதுடன் அவற்றில் எந்தவொரு கட்டமைப்பும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கான உண்மை, நீதி மற்றும் இழப்பீட்டை வழங்கவில்லை.

எனவே தற்போது தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள், கடந்த காலத் தவறுகள் மீண்டும் இடம்பெறக்கூடும் என்ற அச்சத்தைத் தோற்றுவித்துள்ளன.

இந்த ஆணைக்குழு செயற்திறன் மிக்க வகையில் இயங்குவதற்கு அவசியமான பாதுகாப்பான சூழலை உறுதிப்படுத்துதல் மற்றும் நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றை இலக்காகக்கொண்டு நியாயமான நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை.

அதுமாத்திரமன்றி இது குறித்து பாதிக்கப்பட்ட தரப்பினர் உள்ளடங்கலாக சகல தரப்பினருடனும் அர்த்தமுள்ள கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படவில்லை.

மேலும் ஐ.நா மனித உரிமைகள் சபையின் அறிக்கையின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்ட காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் போன்ற உள்ளகப் பொறிமுறைகள் செயற்திறனாக இயங்க முடியாத நிலையில் இருக்கின்றமையுடன் சர்வதேச சட்டத்தின் கீழான குற்றங்கள் தொடர்பான விசாரணைகளை முடக்குவதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எனவே இலங்கை அரசானது உண்மையைக் கண்டறிதல், விசாரணைகளை மேற்கொள்ளல், வழக்குத் தொடரல் என்பவற்றுடன் இழப்பீட்டை வழங்குவதற்கும் மீள்நிகழாமையை உறுதிப்படுத்துவதற்குமான அர்த்தமுள்ள நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய பன்முகத்தன்மை வாய்ந்த செயற்முறையாகவே நிலைமாறுகால நீதியை அணுகவேண்டும்.

எந்தவொரு நிலைமாறுகால நீதிப் பொறிமுறையும் வெற்றிகரமாக இயங்குவதற்குப் பாதிக்கப்பட்டோர் உள்ளிட்ட சகல தரப்பினருடனான விரிவான கலந்துரையாடல் இன்றியமையாததாகும்.

இலங்கையானது கடந்த காலங்களில் பல்வேறு ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டு, அவை தோல்வியடைந்த வரலாற்றைக் கொண்டிருக்கின்றது.

எனவே உண்மை, நீதி மற்றும் இழப்பீடு ஆகியவற்றை வழங்குவதில் ஏற்கனவே அடையப்பட்ட தோல்வியை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகள் குறித்த பரிந்துரைகளைத் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான முன்மொழிவுகளில் அரசு உள்ளடக்கவில்லை.

அதேபோன்று பாதிக்கப்பட்ட தரப்பினர் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான முறையான நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணி அபகரிப்பு மற்றும் சிறுபான்மையின சமூகங்களுக்குச் சொந்தமான மத வணக்கத்தலங்களைக் கைப்பற்றுதல் ஆகியவற்றை முன்னிறுத்தி சில அரச கட்டமைப்புக்கள் இயங்கி வருகின்றன.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் பல தசாப்தகாலமாக வன்முறைகளுக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் முகங்கொடுத்த சமூகத்தின் நம்பிக்கைமிகுந்த பங்கேற்புடன்கூடிய உண்மையைக் கண்டறியும் செயன்முறையை நியாயமான முறையில் முன்னெடுக்க முடியாது.

மேலும் எந்தவொரு உள்ளகப் பொறிமுறை மீதும் நம்பிக்கை இழந்திருக்கும் பாதிக்கப்பட்ட தரப்பினர் மத்தியில் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் மீதான நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டுமெனில், அரசு பாதிக்கப்பட்ட தரப்பினரின் கரிசனைகளுக்குத் தீர்வை வழங்கக்கூடியவாறான அர்த்தமுள்ள கலந்துரையாடல்களில் ஈடுபட வேண்டும்.

எந்தவொரு பொறிமுறையும் அதன் இலக்கை அடைந்துகொள்வதற்கு, அது பாதிக்கப்பட்ட தரப்பினரை மையப்படுத்திய பொறிமுறையாக அமைவது அவசியமாகும்.

அத்தோடு காணாமல்போனோர் பற்றிய அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் உள்ளிட்ட கடந்தகால உள்ளகப் பொறிமுறைகளின் தோல்வி, உள்ளகப் பொறிமுறைகளில் உரியவாறான சர்வதேசப் பங்கேற்பு உறுதிப்படுத்தப்படாமை, அவ்வாறு உறுதிப்படுத்தப்பட்டாலும் அவை போதியளவு செயற்திறனுடன் இயங்காமை, முக்கிய மனித உரிமை மீறல் வழக்கு விசாரணைகள் முடக்கப்படல் என்பனவும் பாதிக்கப்பட்ட தரப்பினர் மத்தியில் நிலவும் நம்பிக்கையீனத்துக்கான முக்கிய காரணங்களாகும்.

(06ஆம் பக்கம் பார்க்க...)

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தமிழருக்கு வந்தால் தக்காளி சட்னி

*'தனக்குத் தனக்கு என்றால் சுளகு படக்குப் படக்கு என்று அடிக்குமாம்!' என்பார்கள்.*

*'ஊருக்கடி உபதேசம், உனக்கில்லையடி!' என்றும் கூறுவார்கள்.*

*ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் விவகாரத்தை ஒட்டிய சர்ச்சை திரும்பி இருக்கும் நிலைமையைப் பார்க்கும்போது இந்த வாய்மொழிக் கூற்றுக்கள்தாம் நினைவுக்கு வருகின்றன.*

*யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் பல்லாயிரம் அப்பாவிப் பொதுமக்கள் வகைத்தொகையின்றிப் படுகொலை செய்யப்பட்டார்கள். அச்சமயத்தில் பெருமெடுப்பில் யுத்தக் குற்றங்கள் இழைக்கப்பட்டன. மனித குலத்துக்கு எதிரான மோசமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டன. அவை எல்லாம் குறித்து சர்வதேச நியமங்களுக்கு அமைவாக நீதி விசாரணைகள் நடத்தப்பட்டு , உண்மைகள் கண்டறியப்பட்டு, பொறுப்பு கூறல் நிலைநாட்டப்பட வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலிலே தீர்மானம் மேல் தீர்மானம் நிறைவேற்றி வலியுறுத்தி நிற்கின்றது.*

*தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து சர்வதேச நீதி விசாரணை தேவை என்று பாதிக்கப்பட்ட தமிழர்களும் விடாது வலியுறுத்தி நிற்கின்றனர்.*

*அத்தகைய சர்வதேச நீதி விசாரணையை தென்னிலங்கை ஒன்றுபட்டு எதிர்த்து நிற்கின்றது. இலங்கையில் நடைபெற்ற விடயங்களுக்கு சர்வதேச விசாரணையை அனுமதிப்பது இலங்கை நாட்டின் இறைமையைக் கேள்விக்கு உள்ளாக்கும் விடயம் என்று ஒரு பொருத்தமற்ற சித்தாந்தத்தை தென்னிலங்கை வலியுறுத்தி - வற்புறுத்தி - நின்றது. நிற்கின்றது.*

*ஆனால் இப்போது முதல் தடவையாக நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் - அவர் மூலமாக அவரது தலைமையிலான பிரதான எதிர்க்கட்சி - இவ்விடயத்தில் இறங்கி வரும் நிலைமை ஏற்பட்டுள்ளது. ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சூத்திரதாரிகள் விடயத்தின் பின்புலத்தை ஆராய சர்வதேச விசாரணை தேவை என்று எதிர்க்கட்சித் தலைவர் கோரியிருக்கின்றார். இது நியாயமான கோரிக்கைதான்.*

*குண்டு தாக்குதலுக்கான சூத்திரதாரிகள் என்ற குற்றச்சாட்டு, அந்தக் குண்டு தாக்குதலின் மூலம் ஆட்சி அதிகாரத்துக்கு வந்த தரப்பு மீது சுமத்தப்படுவதால், அந்த ஆட்சித் தரப்பு மூலம் நீதியான விசாரணை நடைபெறாது என்று எதிர்க்கட்சி தலைவர் நம்புவது - கருதுவது - சரியானதுதான். அந்தப் பின்புலத்தில் சர்வதேச விசாரணையை அவர் கோருவதும் நியாயமானதுதான்.*

*ஆனால், யுத்தத்தின் இறுதியில் ஓரினத்திற்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட இனவழிப்புக் குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டிலும் கூட இதுதான் விடயம். விவகாரம்.*

*அங்கும் சிங்கள அரசுக்கும், சிங்கள ஆட்சிப் பீடத்துக்கும், அந்த அரசு வழிநடத்தும் சிங்களப் படைகளுக்கும் எதிராகக் குற்றச்சாட்டு. தமிழர்கள் மீது யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை உரிமை மீறல்கள் புரியப்பட்டன எனக் குற்றச்சாட்டுகள். அத்தகைய குற்றச்சாட்டுகள் மீதான விசாரணையை சிங்கள அரசுக் கட்டமைப்பின் கீழ் செயற்படும் இனவாத நீதித்துறையால் நீதியாக முன்னெடுக்க முடியாது என்று உறுதியாக கருதுகின்றமையாலேயே அது தொடர்பில் சர்வதேச விசாரணையை தமிழர்கள் கோரி நிற்கின்றார்கள்.*

*அப்போது தென்னிலங்கை அரசு கட்டமைப்புடன் சேர்ந்து அதனை எதிர்த்தவர்கள், இப்போது தமக்கு அரசு கட்டமைப்பிடமிருந்து நீதி கிட்டாது என்று தெரிந்ததும் தாங்கள் சர்வதேச விசாரணையைக் கோருகின்றனர்.*

*'உனக்கு வந்தால் தக்காளி சட்னி; எனக்கு வந்தால் இரத்தம்' என்ற கதைதான் இது.*

*'இதைத்தானே (சர்வதேச விசாரணையைத்தானே) இவ்வளவு நாள்களும் நாங்களும் வலியுறுத்தி நிற்கின்றோம்' என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் சம்மட்டி அடியாக 'ட்வீட்' மூலமாகக் கேள்வி எழுப்பியிருக்கின்றமையும் கவனிக்கத்தக்கது.*

# சீன முதலீட்டாளர்கள் டக்ளஸுடன் பேச்சு!





சீன நாட்டு முதலீட்டாளர்கள் குழுவினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

தாம் கடற்றொழில் துறையில் முதலீடுகளைச் செய்வதற்கும், தமது படகுகளின் மூலம் பிடிக்கும் மீன்களை தமது நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் விரும்புகின்றனர் என அவர்கள் அமைச்சரிடம் நேரில் தெரிவித்தனர்.

அத்துடன், தமக்கான அனுமதிகளை கடற்றொழில் அமைச்சு வழங்குமானால், இத்துறையில் பாரிய முதலீடுகளை செய்வதற்கு தாம் தயாராகவுள்ளனர் என சீன முதலீட்டாளர்கள் தெரிவித்தனர்.

அதற்கு அமைச்சர், குறித்த குழுவினர் தமது திட்டவரைபை வழங்கினால் இவ்விடயம் தொடர்பில் ஆராய்வதாக கூறினார்.

இந்த இரு தரப்பு சந்திப்பில் கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியால் நிஷாந்த மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## உண்மைகளைக் கண்ட...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்வாறானதொரு பின்னணியில் மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டோர் மற்றும் அவர்களது குடும்பத்தினருடன் இதுபற்றி விரிவாகக் கலந்துரையாடுவதுடன், அவர்களது உரிமைகளை உறுதிப்படுத்தக்கூடியவாறான நிலைமாறுகால நீதிப்பொறிமுறையினை நடைமுறைப்படுத்துமாறு நாம் அரசை வலியுறுத்துகின்றோம்.

மேலும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு எதிராக நிகழும் மனித உரிமை மீறல்களை முடிவுக்குக்கொண்டுவருவதன் மூலம் உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீள்நிகழாமையை உறுதிப்படுத்துவதில் தாம் கொண்டிருக்கும் கடப்பாட்டை அரசு வெளிப்படுத்தவேண்டும்.

அதேபோன்று சர்வதேச சட்டத்தின் கீழான குற்றங்கள் மற்றும் மிகமோசமான மனித உரிமை மீறல்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்களை முறையான வழக்கு விசாரணைகளுக்கு உட்படுத்தவேண்டும்.

அதேவேளை தற்போது இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்களை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வருவதுடன் எதிர்கால நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் பொறிமுறைகள் மீதான நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்குரிய நடவடிக்கைளை முன்னெடுக்குமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை மற்றும் இலங்கைக்கு அழுத்தம் பிரயோகிக்கக்கூடிய நிலையிலுள்ள சர்வதேச நாடுகள் அரசிடம் வலியுறுத்த வேண்டும்.

அத்தோடு வெளிப்படைத்தன்மை வாய்ந்ததும், சர்வதேச சட்டக் கோட்பாடுகளை நிலைநிறுத்தக் கூடியதும், பாதிக்கப்பட்ட தரப்பினரின் கரிசனைகளுக்கு முன்னுரிமை அளிக்கக்கூடியதுமான செயன்முறைகளுக்கே ஐ.நாவும் ஏனைய சர்வதேச நாடுகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்." – என்று அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# நிந்தவூர் பிரதேசத்தில் கடலரிப்பை ஹக்கீம் குழுவினர் நேரில் பார்வை






(பௌசுல் றிபாஸ்)

நிந்தவூர் பிரதேசத்தில் கடலரிப்பி னால் பாதிக்கப்பட்டுள்ள இடங்களுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலை வரும், நாடாளுமன்ற உறுப்பினரு மான ரவூப் ஹக்கீம் விஜயம் செய் தார்.

ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான குழுவில் நாடா ளுமன்ற உறுப்பினர்களான எம்.எஸ். தௌபீக், எச்.எம்.ஹரிஸ், பைசல் ஹாசிம், முன்னாள் நாடாளுன்ற உறுப்பினர் எம். எல்.ஹிஸ்புல்லாஹ், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ்.உதுமா லெவ்வை ஆகியோர் சென்றியிருந்த னர்.

அண்மைக்காலமாக நிந்தவூர் பிர தேசத்தில் ஏற்பட்டுள்ள இக்கடலரிப்புக் காரணமாக மீனவர்களின் வாழ்வாதா ரம் பாதிக்கப்பட்டுள்ளது. அவர்கள் தமது அன்றாட நடவடிக்கைகளை மேற் கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப் பட்டுள்ளனர். இதேவேளை இங்கிருந்த தென்னை மரங்கள், மீனவர்களின் வாடிகள், மீன்பிடி உபகரணங்களும் சேதமடைந்துள்ளமையும் குறிப்பிடத் தக்கது.

# ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்கு ராஜபக்ஷக்கள்தான் பொறுப்பு!

## மேர்வின் சில்வாவும் சேர்ந்து குரல் எழுப்புகின்றார்

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் சனல் 4 வெளியிட்ட தகவல்களை தாம் ஏற்றுக் கொள்கிறார் என முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தி யாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய அவர், உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு ராஜபக்ஷக்களே பொறுப்பு என வலியுறுத் தியுள்ளார்.

இது குறித்து தொடர்ந்தும் பேசிய அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து புலனாய்வுப் பிரிவினரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இந்திய புலயாய்வு பிரிவும் எச்சரிக்கை விடுத்திருந்தது.

அப்போதைய ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் உயர் மட்டத் தில் இருந்த அரசியல்வாதிகள் இது குறித்து அறிந்திருக்க வேண்டும்.

இதனை ஒரு சிறிய விடயமாகவே அவர்கள் கருதியிருந்தனர். ஆனால் இதுவொரு கோழைத்தனமான தாக் குதல் ஆகும். இந்த சம்பவம் இடம்பெற்ற போது மைத்திரிபால சிறிசேன சிங்கப்பூர் சென்றிருந்தார்.

ஒன்றரை நாள் கழிந்தே அவருக்கு இந்த சம்பவம் குறித்து தெரியவந்துள்ளது. பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் கூறுவது சரியானதே. நான் அவரை மதிக்கிறேன்.

இந்த சம்பவத்துடன், முக்கிய அரசி யல்வாதிகளுக்குபெரியதொடர்புஇருக்கின் றது. அதிகாரத்தை கைப்பற்ற ராஜபக் ஷர்கள்தெரிந்தே இந்தச்சதியைச்செய்துள் ளனர்.

மற்றவர்கள் இதற்கு துணை இருந்துள் ளனர். இந்த சம்பவம் தொடர்பில் சனல் 4 வெளியிட்ட தகவல்களை நான் ஏற்றுக் கொள்கின்றேன். சில ஊடகங்கள் இதை சாதாரணமாக எடுத்துக்கொள்கின்றன.



எனினும், இதுவொரு மிகப் பெரிய பிரச்சினை ஆகும். தவறு செய்திருந் தால் அதனை ஏற்றுக்கொள்ளவேண்டும். இதற்கு அஞ்சும் ஆள் நான் இல்லை.

அன்றைய அரச தலைவர்கள் ராஜ பக்ஷவே இதற்கு முழுப் பொறுப்பு என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# நூறு கோடி டொலர் முதலீட்டை இலங்கைக்கு கொண்டு வரும் மாநாடு ஒன்றை நடத்த ஏற்பாடு

நூறு கோடி டொலர் முதலீட்டை இலங்கைக்குக் கொண்டு வரும் பொருளாதார மாநாடொன்றை நடத்த சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட் திட்டமிட்டுள்ளார் எனப் புவியியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவர் ஆர்.சஞ்சீவன் தெரிவித்துள்ளார்.

சுற்றாடல் அமைச்சின் கீழ் உள்ள புவியியல் மற்றும் சுரங்கப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஒக்டோபர் 21ஆம், 22ஆம் திகதிகளில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது. “சர்வதேச புவியியல் மற்றும் கனிம வளங்கள் உச்சி மாநாடு“ – என்ற கருப்பொருளின் கீழ் மாநாடு இலங்கையில் முதன்முறையாக நடைபெறவுள்ளது.

இந்த உச்சிமாநாட்டில் ஐந்நூறுக்கும் மேற்பட்ட வெளிநாட்டு முதலீட்டாளர்களிடம் நூறு கோடி டொலர் முதலீடுகளைப் பெற சுற்றாடல் அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இந்த ஊடக சந்திப்பில் புவியியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகத்தின் தலைவர் மேலும் கூறியதாவது:–

“இலங்கையின் முதலாவது புவியியல் மற்றும் கனிம வள உச்சி மாநாட்டை நடத்துவதற்கு புவியியல் மற்றும் சுரங்கப் பணியகம் அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட்டின் வழிகாட்டுதலின் கீழ், நூறு கோடி டொலர் வெளிநாட்டு முதலீடுகளை இலங்கைக்குள் கொண்டுவரத் திட்டமிட்டே இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள நமது நாட்டிற்கு இது மிகவும் சிறப்பான நிவாரணமாக இருக்கும்.

அதற்காக, உலகின் கனிம வளத்துறையில் முன்னணியில் உள்ள, குறைந்தபட்சம்,ஐந்நூறு வெளிநாட்டு முதலீட்டாளர்களை அழைத்துவர நடவடிக்கை எடுத்து வருகிறோம்.



ஒக்டோபர் 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டிற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது. மேலதிக தகவல்களை ஐஅக.டம இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

வெளிவிவகார அமைச்சின் உதவியுடனும், எமது ஊழியர்களின் அர்ப்பணிப்புடனும் இராஜதந்திர உறவுகளின் ஊடாக உலகின் பல நாடுகளை நாம் ஏற்கனவே அழைத்துள்ளோம்” என்றும் அவர் கூறியுள்ளார்.

# மதுபானசாலை அமைப்பதற்கு எதிர்ப்பு பூநகரியில் கவனவீர்ப்புப் போராட்டம்!



கிளிநொச்சி பூநகரியில் மதுபான சாலை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து பிரதேச பொது அமைப்புகளால் கவனவீர்ப்புப் பேரணி ஒன்று நேற்று செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது.

நேற்றுப் பகல் பூநகரி சங்குப்பிட்டி வீதியின் பழைய பிரதேச செயலக வளாகம் முன்றிலில் இருந்து இந்தப் பேரணி ஆரம்பமாகி புதிய பிரதேச செயலகம் வரை சென்றடைந்தது.

பிதேச செயலகத்தை சென்றடைந்த பேரணியின் இறுதியில் பிரதேச செயலர் மற்றும் மதுவரித் திணைக்கள அதிகாரிகளுக்கான மகஜர்களும் கையளிக்கப்பட்டன.

இப்போராட்டத்தில் பூநகரி பிரதேசத்தை சேர்ந்த பொது அமைப்புகளைச் சேர்ந்தோர்,பெண்கள் வலை அமைப்புப் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

பூநகரி பிரதேசத்தின் மையப் பகுதியான வாடியடி பகுதியில் உணவகத்துடன் கூடிய மதுபான சாலை ஒன்று பல்வேறு எதிர்ப்புக்களுக்கு மத்தியில் ஏற்கனவே இயங்கி வருகின்றது.

இந்த நிலையில் அதனை மதுபான விற்பனை நிலையமாக மாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனக் கூறப்படுகின்றது. அதற்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# குண்டுத் தாக்குதலுக்கு முன்பே ராஜபஷிக்கள் மக்கள் ஆணையை மீளப் பெற்று விட்டனராம்!

## மஹிந்தானந்த அளுத்கமகே நாடாளுமன்றத்தில் விளக்கம்

தென்னிலங்கையில் சிங்கள அரச தலைவரை உருவாக்குவதற்காகவே ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டதாக குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் அன்ஷிப் ஆஸாத் மௌலானா 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆறாயிரம் ரூபா மாத சம்பளம் பெற்றவர். ஆனால் தற்போது அவர் பல மில்லியனுக்கு சொந்தகாரராக உள்ளார்.

ஏப்ரல்குண்டுத்தாக்குதலுக்குமுன்னரே ராஜபக்ஷர்கள் மக்களாணையை வென்று விட்டார்கள். குண்டுத்தாக்குதலை மேற்கொண்டு மக்களாணையை பெற வேண்டிய தேவை ராஜபக்ஷர்களுக்கு இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆயுர்வேதம் (திருத்த) சட்டமூலத்தின் மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறிய விடயங்கள் வருமாறு:-

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சனல் -04 ஊடகம் 15 நிமிட காணொலி ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த காணொலி தற்போது தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் பிரதான பேசுபொருளாக காணப்படுகிறது.

தென்னிலங்கையில் சிங்கள அரச தலைவர் ஒருவரை உருவாக்குவதற்காக இந்த குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டதாக இந்த காணொலியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் எதிர்வரும் வாரம் இடம்பெறவுள்ள பின்னணியில் தான் சனல் -04 இவ்வாறான காணொலிகளை வெளியிடுகிறது.

வெள்ளைக் கொடி ஏந்தி வந்த அப்பாவி தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள் என குறிப்பிட்ட சனல் -04 தான் தற்போது ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் குறித்து செய்திகளை வெளியிட்டுள்ளது.

சனல் -04 விற்கு முறைப்பாடு அல்லது தகவல்களை வழங்கியுள்ள அன்ஷிப் ஆஸாத் மௌலானா என்ற நபர் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் ஊடாக ஊடக செயலாளராக அடையாளப்படுத்தப்பட்டுள்ளார். இந்த நபர் சுவிஸ்லாந்து நாட்டில் அரசியல் பாதுகாப்பு கோரியுள்ளார்.

அன்ஷிப் ஆஸாத் மௌலானா என்ற இந்த நபரின் தனிப்பட்ட வங்கி கணக்குக்கு 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வெளிநாடுகளில் இருந்து 700 இலட்சம் ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளது.

அத்துடன் அவர் தெஹிவளையில் உள்ள வீட்டை 500 மில்லியன் ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளார். இந்தளவு செல்வந்தரான இந்த நபர் 2017 ஆம் ஆண்டு முதலாவதாக பணியில் இருந்த போது 6000 ரூபா மாத சம்பளத்தை பெற்றுக்கொண்டுள்ளார்.

மாதம் 6000 ரூபா சம்பளம் பெற்ற நபரின் வங்கி வைப்பில் 700 மில்லியன் ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளது. மறுபுறம் 500 மில்லியன் ரூபாவுக்கு வீட்டை விற்றுள்ளார்.

இவர் தான் தென்னிலங்கையில் சிங்களஅரசதலைவர்ஒருவரைஉருவாக்க ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் நடத்தப்பட்டதாக குறிப்பிடுகிறார். இவருக்கு எதிராக பொலிஸில் நிதி மோசடி உள்ளிட்ட பல முறைப்பாடுகள் உள்ளன.

இந்த குற்றச்சாட்டுக்கள் முறையற்றது. ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் 2019 ஆம் ஆண்டு இடம்பெற்றது. ஆனால் 2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை முன்னிலைப்படுத்தி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அமோக வெற்றிப் பெற்றது. ஏப்ரல் குண்டுத்தாக்குதலுக்கு முன்னர் ராஜபக்ஷர்கள் மக்களாணை-யைப் பெற்றுக்கொண்டுள்ளார்கள்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் குறித்து பலர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அப்போதைய அரசாங்கத்தின்



ஜனாதிபதி. பாதுகாப்பு செயலாளர், புலனாய்வு பிரிவினர் ஆகியோருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சர்வதேச நிறுவனங்கள் அறிக்கை சமர்ப்பித்துள்ளன. மக்களாணையை வெல்ல குண்டுத்தாக்குதலை நடத்த வேண்டிய தேவை ராஜபக்ஷர்களுக்கு இல்லை.

சனல்- 4 குறுகிய அரசியல் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகிறது. எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள தேர்தல்களில் மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டை தோற்றுவிக்க முயற்சிக்கிறார்கள்.

தென்னிலங்கையில் சிங்கள அரச தலைவரை தோற்றுவிக்க 09 முஸ்லிம் அடிப்படைவாதிகள் தற்கொலை குண்டுத்தாரிகளாக மாறுவார்களா?

கோட்டபய ராஜபக்ஷ இரண்டு வருடகாலம் ஜனாதிபதியாக பதவி வகித்தார். பல்வேறு காரணிகளால் அவர் பதவி விலகினார். கோட்டபய ராஜபக்ஷவைப் பதவி விலக்க செயற்பட்டவர்கள் தாம் இறக்கும் தருணத்தில் அதற்காக வேதனையடைவார்கள். நாட்டை ஆட்சி செய்த அரச தலைவர்களில் ஊழலற்ற அரச தலைவராகவே கோட்டபாய ராஜபக்ஷ செயற்பட்டார்.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் அடிப்படைவாதிகள் அனைவரும் ஒன்றிணைந்து அவரை பதவி விலக்கினார்கள். பொய்யான குற்றச்சாட்டுக்களை தொடர்ந்து முன்வைத்தால் அதற்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுப்போம். - என்றார்.

## ராஜபக்ஷக்களும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர் இந்த கோரிக்கையை விடுத்தார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் பிரிட்டன் ஊடகமான "சனல் 4" ஊடாக வெளியான தகவல் சாதாரணமான விடயமல்ல.

அதன் சூத்திரதாரியாக கிழக்கு மாகாணத்தின் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தைக் காட்டிக்கொடுத்தவருமான பிள்ளையான் இருக்கின்றார். இவர் தற்போது இராஜாங்க அமைச்சுப் பதவியை வகிக்கின்றார்.

பிள்ளையான் இலங்கை இராணுவத்துடன் இணைந்து 2009 ஆம் ஆண்டு வரை தமிழர்கள் பலர் கொல்லப்படுவதற்கும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்படுவதற்கும்காரணமாகஇருந்துள்ளார்.

இந்நிலையில், 2020 ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கில் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை அரங்கேற்றி அந்தப் பழியை முஸ்லிம் மக்கள் மீது ராஜபக்ஷக்கள் சுமத்தியுள்ளனர்.

இலங்கையின் பொருளாதாரத்துக்குப் பெரும் பங்காற்றிய முஸ்லிம் சமூகத்தை ஒரே நாளில் குற்றவாளியாக்கி, அவர்களின் பொருளாதாரத்தை ராஜபக்ஷக்கள் அழித்துள்ளனர்.

சிங்கள மக்களை முஸ்லிம் மக்களுக்கு எதிராக அவர்கள் திருப்பியிருந்தனர். இவ்வாறான பின்னணியில் ஜனாதிபதித் தேர்தலில் எவ்வாறு வாக்குகளைப் பெற்றுக்கொண்டார்கள் என்பது யாவரும் அறிந்த ஒன்றே.

சிங்கள மக்கள் ஒன்றை நிதானமாகச் சிந்திக்க வேண்டும். 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் விடுதலைப்புலிகளை வெற்றிகொள்ள முடியாத இராணுவத்தினர் திட்டமிட்டு சிங்கள மக்கள், பிக்குகள் பயணித்த பஸ்ஸில் குண்டு வைத்தனர்.

இதன் மூலம் சிங்கள மக்களைத் தமிழ் மக்களுக்கு எதிராகவும், விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும் கோபப்பட வைத்து ஓர் இன அழிப்பை மேற்கொள்வதற்கு ராஜபக்ஷக்கள் சதி செய்தனர்.

இதனை சர்வதேச விசாரணை ஒன்றின் ஊடாக மட்டுமே வெளிக்கொண்டு வர முடியும். இந்நிலையில், பிள்ளையான் போன்றவர்கள், ராஜபக்ஷக்கள் உடனடியாகக் கைதுசெய்யப்பட வேண்டும். அவர்களுக்கு எதிராகச் சர்தேச விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்." - என்றார்.

# இந்தியாவிற்கு பதில் பாரதம்; எதிர்க்கட்சியினர் கண்டனம்

ஜி 20 உச்சி மாநாடு எதிர்வரும் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் டெல்லியில் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், ஜி 20 மாநாட்டிற்கான விருந்துபசார அழைப்பிதழில் 'பிரசிடெண்ட் ஒவ் பாரத்' என அச்சிடப்பட்டுள்ளமை இந்தியாவில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.


வழக்கமாக 'பிரசிடெண்ட் ஒவ் இந்தியா' என்றே அச்சிடப்படும் நிலையில், வழக்கத்திற்கு மாறாக இவ்வாறு அச்சிடப்பட்டிருப்பதை பலரும் விமர்சித்து வருவதுடன், சிலர் ஆதரவான கருத்துகளையும் வெளியிட்டு வருகின்றனர்.

ஜி 20 விருந்து அழைப்பிதழில் பாரத் குடியரசுத் தலைவர் என அச்சிட்டிருப்பதை விமர்சித்துள்ள காங்கிரஸ் கட்சி, இதன் மூலம் மாநிலங்களின் ஒன்றியம் தாக்குதலுக்குள்ளாகி இருப்பதாகக் குற்றம் சாட்டியுள்ளது. இதேபோல், திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்துள்ளன.

டில்லியில் நடைபெறவுள்ள ஜி 20 மாநாட்டில் பங்கேற்க அமெரிக்க அதிபர் ஜோ பைடன் முதல் உறுப்பு நாடுகளின் தலைவர்கள் வரை பலரும் பங்கேற்கவுள்ளனர்.

மாநாட்டின் ஆரம்ப தினத்தில் இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அரச தலைவர்களுக்கு விருந்தளிக்கவுள்ளார்.

இதற்கான அழைப்பிதழில் 'பிரசிடெண்ட் ஒவ் பாரத் ' என அச்சிட்டிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. வழக்கமாக 'பிரசிடெண்ட் ஒவ் இந்தியா 'என்றே அச்சிடப்படும் நிலையில், வழக்கத்திற்கு மாறாக இவ்வாறு அச்சிடப்பட்டிருப்பதை எதிர்க்கட்சியான காங்கிரஸ் விமர்சித்துள்ளது.






இவ்வாறு அச்சிடப்பட்டிருப்பது உண்மை தான் என காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பு பொதுச்செயலாளர் ஜெயராம் ரமேஷ் சமூக வலைத்தளத்தில் உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்திய அரசியல் சாசன சட்டப் பிரிவு 1 இனி இந்தியா என்றழைக்கப்பட்ட பாரதம், மாநிலங்களின் ஒன்றியம் என வாசிக்கப்படும் போல. மாநிலங்களின் ஒன்றியம் தற்போது தாக்குதலுக்குஉள்ளாகி இருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, இந்தியாவை வளர்ச்சி மிகு இந்தியாவாக மாற்றப்போகிறோம் என சொல்லிக்கொண்டு ஆட்சிக்கு வந்த பிரதமர் நரேந்திர மோடியால், ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியா என்ற பெயரை மட்டும் தான் மாற்ற முடிந்திருக்கிறது என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சில கட்சிகளின் கூட்டணிப் பெயர் இந்தியாவாக இருப்பதால், நாட்டின் பெயரை மாற்றுவார்களா என டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால் கேள்வி எழுப்பியுள்ளார். நாடு 140 கோடி மக்களுக்கு சொந்தமானது. ஒரு கட்சிக்கு சொந்தமானது அல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், இந்தியா என்ற வார்த்தைக்கு பதில் பாரதம் என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருப்பதற்கு இந்திய மத்திய அமைச்சர்களும் ஆளும் பாரதிய ஜனதாக கட்சியின் பிரமுகர்களும் மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளனர்.

## உதயநிதிக்கு துணை நிற்கிறேன்: இயக்குநர் பா. ரஞ்சித் ஆதரவு



சமூக நீதி மற்றும் சமத்துவம் கொண்ட சமுதாயத்தை உருவாக்க சனாதன தர்மத்தை ஒழிக்க வேண்டும் என்ற உதயநிதியின் கருத்துக்கு துணை நிற்கிறேன் என இயக்குநர் பா.ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது சமூக வலைத்தள பக்கத்தில் குறிப்பிடுகையில், அமைச்சர் உதய ஸ்டாலின் சனாதன தர்மத்தை ஒழிக்க அழைப்பு விடுக்கும் பேச்சு பல நூற்றாண்டுகளாக சாதி எதிர்ப்பு இயக்கத்தின் அடிப்படைக் கொள்கையாகும்.

சாதி மற்றும் பாலினத்தின் பெயரால் நிகழும் மனித தன்மையற்ற செயல்களும் தான் சனாதன தர்மத்தில் உள்ளது. புரட்சித் தலைவர் பாபாசாகேப் அம்பேத்கர், அயோத்திதாஸ் பண்டிதர், தந்தை பெரியார், மகாத்மா பூலே, துறவி ரவிதாஸ் போன்ற ஜாதி எதிர்ப்பு சீர்திருத்தவாதிகள் அனைவரும் தங்கள் சாதி எதிர்ப்பு சித்தாந்தத்தில் இதையே வலியுறுத்தியுள்ளனர்.

அமைச்சரின் பேச்சை திரித்து இனப்படுகொலைக்கான அழைப்பு என்று தவறாகப் பயன்படுத்தும் கேடு கெட்ட அணுகுமுறை ஏற்றுக்கொள்ள முடியாதது.

அமைச்சரின் மீது அதிகரித்து வரும் வெறுப்பும் வேட்டையும் மிகவும் கவலையளிக்கிறது. சமூக நீதி மற்றும் சமத்துவம் கொண்ட சமுதாயத்தை உருவாக்க சனாதன தர்மத்தை ஒழிக்க வேண்டும் என்ற உதயநிதியின் கருத்துக்கு துணை நிற்கிறேன் என்று பதிவிட்டுள்ளார்.

## 'பாரத்' குறித்து கங்கனா பதிவு

இந்தியாவை 'பாரத்' என அழைக்க வேண்டும் என தான் நெடுங்காலமாக சொல்லி வருகிறேன் என நடிகை கங்கனா ரனாவத் தனது சமூக வலைத்தள பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

அந்த பதிவில் அவர் மேலும் குறிப்பிடுகையில், இந்தியாவை பாரத் என அழைக்க வேண்டும் என நான் நீண்ட நாட்களாக சொல்லி வருகிறேன். மகாபாரத காலத்திலிருந்தே, குருசேத்திரப் போரில் பங்கேற்ற அனைத்து ராஜ்ஜியங்களும் பாரதம் என்ற கண்டத்தின் கீழ் வந்தன.

இந்தியா என்ற பெயரை வைத்தது ஆங்கிலேயர்கள். அதன் மூலம் அவர்கள் நம்மை அடிமைகளாக பார்த்தனர். முன்பு வழக்கத்தில் இருந்த அகராதியிலும் நம்மை அப்படித்தான் குறிப்பிட்டார்கள். இந்தியா நமது நாட்டின் பெயர் அல்ல. நாம் பாரத தேசத்தை சேர்ந்தவர்கள் என கங்கனா தெரிவித்துள்ளார்.

# ரஷ்ய ஜனாதிபதியின் இரகசிய மாளிகை அருகே சுட்டு வீழ்த்தப்பட்ட உக்ரைனின் ட்ரோன்கள்!



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் இரகசிய அரண்மனை மீது தாக்குதல் நடத்த முயற்சித்த உக்ரைனின் ட்ரோன் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது என ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த அறிவிப்பு ரஷ்யாவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ரஷ்ய அதிபர்கள் வேட்டைக்குச் சென்று, பின் விருந்தினர்களுக்கு விருந்துவைக்கும் இரகசிய மாளிகை ஒன்று சவிடோவோ என்னுமிடத்தில் அமைந்துள்ளது. இந்த இரகசிய மாளிகை மீதே ட்ரோன் தாக்குதல் நடத்த முயற்சித்துள்ளது.

இவ்வாறு சுட்டுவீழ்த்தப்பட்ட ட்ரோன் எரிபொருள் கிடங்கின் மீது வீழ்ந்து வெடித்து சிதறியுள்ளது.

வாக்னர் படைத்தலைவர் பிரிகோஜின் பயணம் செய்த விமானம் விபத்துக் குள்ளான பகுதியிலேயே இந்த ட்ரோன் சுட்டு வீழ்த்தப்பட்டது என ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பிளாக் கேணல் என்று அழைக்கப்படும் சோவியத் இராணுவ தந்திரோபாயவா தியும் அரசியல்வாதியுமான ஆய்வாளர் விக்டர் அல்க்ஸ்னிஸ் தாக்குதல் முயற்சி தொடர்பில் தெரிவிக்கையில்,

ரஷ்ய தலைவரின் அரசு இல்லங் களை தாக்க உக்ரைனிய ட்ரோன்கள் மேற்கொண்ட இரண்டாவது முயற்சி இதுவாகும்.

முதலாவது மே 3, 2023 அன்று கிரெம்ளினில் மேற்கொள் ளப்பட்டது என்று தெரிவித்துள்ளார்.

# ரஷ்யா - வடகொரியா இடையே ஆயுத பரிமாற்ற கலந்துரையாடல்!



வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன் இம்மாதம் ரஷ்யாவுக்கு பயணம் மேற்கொள்ள உள்ளார் எனவும் ரஷ்ய ஜனாதிபதி புடினை சந்தித்து உக்ரைன் போருக்கு ஆயுதங்களை வழங்குவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து விவாதிக்க உள்ளார் என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்காவின் ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ளது. கிம் ஜாங் உன், ரஷ்யாவுக்கு ஆயுதம் தாங்கிய வீரர்கள் பாதுகாப்புடன் தொடருந்தில் பயணம் மேற்கொள்ள உள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாட்டு தலைவர்கள் எந்த இடத்தில் சந்தித்து பேசுவார்கள் என்று தெளிவான விபரம் கிடைக்கவில்லை. ஆனால் பசுபிக் துறைமுக நகரமான விளாடிவோ ஸ்டாக்கில் இந்த சந்திப்பு நடைபெறலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

# உலக நீர் வள பாதுகாப்பு அமைப்பு!

உலகளாவிய நீர் வளத்தை பாதுகாப்பதற்கான ஓர் அமைப்பை சவூதி அரேபியா நிறுவுவதாக அந்த நாட்டு பட்டத்து இளவரசரும் பிரதமருமான இளவரசர் முஹம்மத் பின் சல்மான் அறிவித்துள்ளார்.

உலகின் நீர் விநியோகச் சிக்கல்களை சீர்செய்யும் தூர நோக்கோடு இவ்வமைப்பு நிறுவப்பட்டுள்ளதோடு சுற்றுச்சூழல் மற்றும் வளங்களை பாதுகாத்தல் தொடர்பான சவூதி அரேபியாவின் கரிசனைக்கான ஒரு எடுத்துக்காட்டாக இத்திட்டம் அமைகிறது.

உலகளாவிய நீர் வளத்தை பாது காப் பதற்கான நாட்டு அரசாங்கங்கள் மற்றும் அமைப்புகளின் முயற்சிகளை ஒருங்கிணைத்து அவற்றை மேம்படுத்தி அவற்றோடு சேர்ந்து பயணிப்பதற்கு இவ்வமைப்பு முயற்சிக்கிறது.

அத்தோடு இந்த நிறுவனம், ஏனைய நாடுகள் மற்றும் நிறுவனங்களோடு இணைந்து நீர் பாதுகாப்பு தொடர்பான தொழில்நுட்ப அமைப்புகளை மேம்படுத் தவும், புது கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கவும், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அனுபவங்களை பகிர்ந் துகொள்ளவும் முயற்சிகளை மேற் கொள்கிறது.

# சீனப் பெருஞ்சுவரின் ஒரு பகுதியை சேதப்படுத்திய இருவர் கைது!

உலக அதிசயங்களில் ஒன்றான சீனப் பெருஞ்சுவரின் ஒரு பகுதியை சேதப்படுத்திய இருவர் சீனாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடக்கு ஷான்சி மாகாணத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

யூகவுண்டியில் உள்ள 32 பெரிய சுவரின் ஒரு பகுதி சேதமாக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளுக்கு அமைய, 38 வயது ஆண் ஒருவரும் 55 வயது பெண் ஒருவரும் கைதாகியுள்ளனர்.

அகழ்வாராய்ச்சி பணிகளில் ஈடுபடும் குறித்த தரப்பினர் குறுக்குவ ழியை உருவாக்குவதற்காக சுவரை சேதப்படுத்தியுள்ளமைதெரியவந் துள்ளது.



# ஓந்தாச்சிமடம் அரசடி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம்

( வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற ஓந்தாச்சி மடம் அரசடி விநாயகர் ஆலய பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை புதன் கிழமை கர்மாரம்பத்துடன் ஆரம்ப மாகிறது.

9ஆம் தேதி சனிக்கிழமை எண் ணைய்க்காப்பு சாத்தும் நிகழ்வு காலை 6 மணி முதல் மாலை 5 மணி வரை இடம் பெறும் . தொடர்ந்து 10 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை சுப முகூர்த்த வேளையில் மகா கும்பாபிஷே கம் இடம் பெற இருக்கின்றது.

தொடர்ந்து 12 நாள்கள் மண்ட லாபிஷேகம் நடைபெற்று 21 ஆம் திகதி வியாழக்கிழமை 1008 சங்குகளுடன் கூடிய சங்காபிஷேகமும் வீதியுலாவும் இடம்பெறும்.

பிரதிஷ்டா பிரதமகுரு சிவஸ்ரீமு.கு. சச்சிதானந்தமூர்த்திக் குருக்கள் தலை மையிலான சிவாச்சாரியார்கள் கும்பாபி ஷேக கிரியைகளை தொடர்ந்து மேற் கொள்வார்கள் என்று ஆலய பரி பாலன சபையின் தலைவர் த.சற்குணா னந்தன், செயலாளர் வி.காந்தகுமார் ஆகியோர் தெரிவித்தனர்.



# சிறுமியின் கை அகற்றப்பட்டமை தொடர்பில் சுகாதார அமைச்சு விசாரணை முன்னெடுப்பு

காய்ச்சல் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்ட சிறுமி ஒருவரின் இடது கை, அறுவை சிகிச்சை மூலம் அகற் றப்பட்டமை தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பான ஆரம்ப கட்ட விசாரணை அறிக்கை தற்போது கோரப்பட்டுள்ளது என பிரதி சுகா தார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஜீ.விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் – மல்லாகம் பகுதி யைச் சேர்ந்த 7 வயது சிறுமியொருவர் காய்ச்சல் காரணமாக கடந்த மாதம் 25 ஆம் திகதி யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந் தார்.

சிறுமிக்கு ஊசி செலுத்துவதற் காக மறுநாள் கெனியூலா செலுத்தப் பட்டதையடுத்து கை வீக்கமடைந் துள்ளது.

பின்னர் கெனியூலா கழற்றப்பட்ட நிலையில், சிறுமியின் இடது கையின் மணிக்கட்டுக்கு கீழுள்ள பகுதி முழுமை யாக செயலிழந்ததால் அதனை அறுவை சிகிச்சை மூலம் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த நிலையில் குறித்த சிறுமியின் இடது கை அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டமை தொடர்பில் வைத் தியசாலை மட்டத்திலும் விசாரணை கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பிலான விசார ணைக்கு இரு வைத்திய நிபுணர்கள் மற்றும் தாதியொருவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது என வட மாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர், வைத்தியர் தங்கமுத்து சத்திய மூர்த்தி தெரிவித்துள்ளார்.

இந்த குழுவின் அறிக்கை கிடைத்த வுடன் அது தொடர்பான மேலதிக நடவடிக்கையை எடுக்கவுள்ளோம் என வைத்தியர் தங்கமுத்து சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், இந்த சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள முறைப்பாட்டிற்கமைய யாழ்.தலை மையக பொலிஸ் நிலையத்தின் மகளிர் மற்றும் சிறுவர் பிரிவிற்கு பொறுப்பான பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித் துள்ளது என பொலிஸ் ஊடகப்பேச் சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்தூவ தெரிவித் துள்ளார்.

வைத்திய பரிசோதனையின் போதா கை அகற்றப்பட்டது அல்லது உண்மை யில் என்ன நடந்துள்ளது என்பது தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# எந்தத் தேர்தலையும் ஒத்திவைக்க அரசு முயற்சிக்கவே இல்லையாம்!



## பந்துல குணவர்தன கூறுகின்றார்

ஜனாதிபதித் தேர்தல் மாத்திரமல்ல, எந்தவொரு தேர்தலையும் ஒத்திவைப் பதற்கு அரசாங்கம் முயற்சிக்கவில்லை. அடுத்த வருடம் உரிய நேரத்தில் அனைத் துத் தேர்தல்களும் இடம்பெறும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்கிழமை இடம் பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட டில், "பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் ஜனாதி பதித் தேர்தலை ஒத்தி வைப்பதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாக குற்றம் சுமத்தியுள்ளமை" தொடர்பில் வினவிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எந்தவொரு தேர்தலையும் ஒத்திவைக்க வேண்டிய அவசியம் அரசாங்கத்துக்கு கிடையாது. அவ்வாறான முயற்சிகளும் முன்னெடுக்கப்படவில்லை. அதில் எவ் வித சந்தேகங்களையும் ஏற்படுத்திக் கொள்ளத் தேவையில்லை. அடுத்த வருடம் அந்தந்தத் தேர்தல்கள் அந் தந்த நேரத்தில் நடத்தப்படும். –என்றார்.

# மான்களை வேட்டையாடிய குற்றச்சாட்டில் மூவர் கைது



புத்தளம் பெட்டிகம பகுதி யில் மான்களை வேட்டையா டிய குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ள னர்.

மகாவெவ வென்னப்புவ பகுதிகளிலுள்ள பல ஹோட் டல்களுக்கு அதிக விலை களில் மான் இறைச்சியை விற் பனை செய்யும் நோக்கில் அவை வேட்டையாடப்படு கின்றன என வனஜீவராசி கள் திணைக்களத்திற்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் புத்த ளம் வனஜீவராசிகள் திணைக் கள உத்தியோகத்தர்களி னால் ஆனமடுவ வனப்பகுதி யில் நேற்று முன்தினம் சுற்றி வளைப்பு முன்னெடுக்கப் பட்டது.

இதன்போது மான்களை வேட்டையாட வந்த குற்றச் சாட்டில் மூவர் கைது செய்யப் பட்டனர்.

கைது செய்யப்பட்ட 3 சந் தேகநபர்களும் மஹகும்புக் கடவல, ரத்மல்கஹவெவ, தொடுவாய் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என புத்தளம் வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் தெரி வித்தனர்.

குறித்த சந்தேகநபர் களிடமிருந்து கெப் வாக னம் மற்றும் வேட்டைக்கு பயன்படுத்தப்படும் துப்பாக்கி கள் ஆகியன பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணை களை புத்தளம் வனஜீவரா சித் திணைக்கள அதிகாரி கள் மேற்கொண்டு வருகின்ற னர்.



# யானைத் தாக்கங்களால் ஏற்படும் சேதங்கள் தொடர்பில் ஆராய்வு

(நூருல் ஹுதா உமர் )

காரைதீவு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மாவடிப் பள்ளி கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் கிராம அலுவலர் ஏ.எம். அலியார் தலைமையில் டெங்கு ஒழிப்பு, யானைத் தாக்கங்களால் ஏற்படுகின்ற சேதங்களை குறைத்தல், இயற்கை அனர்த்தங்களின் எதிர்வு கூறலின் போது முன் ஆயத்தங்களை எவ்வாறு மேற்கொள்வது தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு இடம்பெற்றது.

இதில் வனவிலங்கு பாதுகாப்பு உத்தியோகத்தர், காரை தீவு பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவ உத்தி யோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத் தர்கள், காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலு வலகப் பொது சுகாதாரப் பரிசோதர்கள் ஆகியோர் வள வாளர்களாகக் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தினர்.

கிராமிய ஒத்துழைப்புமன்ற உறுப்பினர்கள் பள்ளி வாசல் நிர்வாகிகள், முன் பள்ளி ஆசிரியைகள் என பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# கண் வில்லைகளுக்கு தட்டுப்பாடு இல்லை!

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

நாட்டில் கண் வில்லைகளுக்கு தட்டுப் பாடு இல்லை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மருந்துப் பொருள்கள் விநியோ கப் பிரிவின் களஞ்சியசாலைகளில் மாத்திரமே கண் வில்லைகள் களஞ்சி யப்படுத்தப்பட்டுள்ளன என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஜி.விஜேசூரிய குறிப் பிட்டுள்ளார்.

நாட்டின் வைத்தியசாலை கட்ட மைப்பிற்குள் கண் வில்லை சத்திர சிகிச்சைகள் வழமை போன்றே மேற் கொள்ளப்படுகின்றன என அரச மருந் தாக்கல் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் தினுஷ தசநாயக்க தெரிவித்துள்ளார்.

இதனிடையே, நாட்டில் 160 வகை யான மருந்துகளுக்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு நிலவுகிறது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்த மருந்துகளை அவசர கொள் வனவு நடைமுறையின் கீழ் இறக்கு மதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள் ளது என சுகாதார அமைச்சு குறிப்பிட் டுள்ளது.




# வடக்கு ரயில் மார்க்கத்தை ஜனவரியில் மூட நடவடிக்கை

நவீனமயப்படுத்தல் செயற்பாடுகளுக்காக எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வடக்கு ரயில் மார்க்கத்தை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆறு மாதங்களுக்குள் வடக்கு ரயில் மார்க்கத்தை நவீனமயப்படுத்த திட்டமிட்டுள்ளது எனப் போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, கொழும்பிலிருந்து காங்கேசன்துறை வரை மணித்தியாலத்திற்கு 100 கிலோ மீட்டர் வேகத்தில் ரயில்களை இயக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, கொழும்பு முதல் பாணந்துறை வரையிலான ரயில் மார்க்கத்தை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகள் எதிர்வரும் சில நாள்களுக்குள் ஆரம்பிக்கப்படுமென அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

களனி மிட்டியாவத்தை ரயில் பாதையின் வேகக் கட்டுப்பாட்டை நீக்கி, வேகத்தை அதிகரிப்பதற்கான புனரமைப்பு பணிகளையும் இம்மாத முற்பகுதியில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.



# இணையத்தளங்கள் ஊடான குற்றங்களை கட்டுப்படுத்த வருகின்றது புதிய சட்டமூலம்

இணையத்தளத்தின் ஊடாக உண்மைக்கு புறம்பான தகவல்களை தெரிவிப்பதும் அவ்வாறான தகவல்கள் ஊடாக அமைதியை சீர்குலைக்கும் நோக்கில், ஆத்திரமூட்டும் வகையில் செயற்படுவதும் குற்றம் என வரையறுத்து புதிய சட்டங்களை அமுல்படுத்த அரசாங்கம் தயாராகின்றது.

இது தொடர்பான சட்டமூலம் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதனை வர்த்தமானியில் வெளியிட்டு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டமூலத்திற்கு “இணைய வழிமுறைகளின் பாதுகாப்பு பற்றிய சட்டமூலம்“ என பெயரிடப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலத்தின் மூன்றாம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, சில நடவடிக்கைகள் தண்டனைக்குரிய குற்றங்களாக பொருள்கோடல் செய்யப்பட்டுள்ளன.

இலங்கைக்குள் இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பாக உண்மைக்கு புறம்பான தகவல்களை வெளியிடுதல், இழிவுபடுத்தலுக்கு ஏதுவாக அமைந்துள்ள உண்மைக்கு புறம்பான தகவல்களை வெளியிடுதல், உண்மைக்கு புறம்பான தகவல்கள் மூலம் கலவரங்களை ஏற்படுத்தும் வகையில் கோபமூட்டுதல், மத உணர்வுகளை புண்படுத்தும் உள்நோக்கில் உண்மைக்கு புறம்பான தகவல்களை வெளியிடுதல், மோசடி செய்தல், ஆள்மாறாட்டம் செய்து மோசடி செய்தல், அமைதியை குலைக்கும் நோக்கில் கோபமூட்டும்உள்நோக்கில்உண்மைக்கு புறம்பான கூற்றுகள் மூலம் தீங்கிழைக்கும் உள்நோக்கில் நிந்தனை செய்தல், சிறுவர் துஷ்பிரயோகம் என்பன குற்றங்களாகும்.

தவறொன்றை செய்யும் பொருட்டு நாடாப் பதிவு தயாரித்தல் அல்லது மாற்றியமைத்தல் என்பனவும் இந்த சட்டமூலத்தில் குற்றங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிட்டு, நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு மின் அதிர்வு சிகிச்சை உபகரணம்









பிரான்ஸ் இலங்கை – இந்திய வர்த்தக சங்கத்தின் நிதியுதவியில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு மின் அதிர்வு சிகிச்சை உபகரணம் நேற்று வழங்கி வைக்கப்பட்டது

ஒரு கோடி ரூபா பெறுமதியான மின் அதிர்வு சிகிச்சை உபகரணம் வழங்கி வைக்கப்பட்டது

தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.எம்.றெமான்ஸ்,

தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையின் உளநல வைத்திய நிபுணர் பேராசிரியர் டாக்டர் எஸ்.சிவயோகன், பிரான்ஸ் இலங்கை – இந்திய வர்த்தக சங்கத்தின் தலைவர் இராசையா சிறீதரன், சங்க உறுப்பினர்கள், வைத்தியசாலையின் வைத்தியர்கள், அதிகாரிகள், பணியாளர்கள் எனப் பலரும் இது தொடர்பான இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்

# காலநிலை மாற்றத்திற்கமைய பயிர்ச்செய்கை நடவடிக்கை

## விரைவில் விவசாய அமைச்சின் புதிய திட்டம்



காலநிலை மாற்றத்திற்கமைய பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பான திட்டம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டம் மிக விரைவில் வெளியிடப்படும்என அமைச்சின்செயலாளர் குணதாச சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அதற்காக உரிய அமைச்சுகளுடன் கலந்துரையாடப்பட்டது என அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்திற்கமைய செயற்படுமாறு விவசாயிகளிடம் கோரிக்கை விடுக்கப்படுவதாக விவசாய அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதனிடையே, பெரும்போகத்தில் ஒரு ஹெக்டேயருக்கான உரத்தைக் கொள்வனவு செய்வதற்காக 20 ஆயிரம் ரூபாவை வழங்க எதிர்பார்த்துள்ளதாக விவசாய அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்க குறிப்பிட்டார்.

தற்போது ஒரு ஹெக்டேயருக்காக வழங்கப்படும் 15 ஆயிரம் ரூபா நிதியை 20 ஆயிரம் ரூபா வரை அதிகரிக்குமாறு விவசாயிகள் இதற்கு முன்னர் கோரிக்கை விடுத்திருந்தனர் என அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, விவசாயிகள் பணம் செலுத்தி தனியார் துறையினரிடம் உரத்தை கொள்வனவு செய்ய முடியும் என விவசாய அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்க தெரிவித்துள்ளார்.

# கொக்குத்தொடுவாய் மனிதப் புதை அகழ்வுப் பணிகள் இன்று ஆரம்பம்



முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகளை இன்று காலை 7.30 மணிக்கு ஆரம்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொக்குத்தொடுவாயில் மனிதப் புதைகுழி உள்ள இடத்திற்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி. பிரதீபன் நேற்று விஜயம் செய்து நிலைமைகளை ஆராய்ந்தார்.

இதனையடுத்து, மனிதப் புதைகுழி அகழ்வு தொடர்பான கலந்துரையாடலொன்றும் அங்கு இடம்பெற்றது.

தொல்லியல்துறை சிரேஷ்ட பேராசிரியர் ராஜ் சோமதேவ, சட்ட வைத்திய அதிகாரி கே.வாசுதேவ, சட்டத்தரணி ரனிதா ஞானராஜா, பொலிஸ் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

இதேவேளை, அகழ்வுப் பணிகளுக்கு வசதியாக தற்காலிகக் கூடாரங்களும் தற்காலிக மலசலகூடங்களும் அங்கு அமைக்கப்பட்டுள்ளன. மனிதப் புதைகுழியை பாதுகாப்பதற்காக தற்காலிகக் கொட்டகையொன்றும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

# வறட்சியால் மின்சார சபைக்கு 3,300 கோடி ரூபா நஷ்டமாம்!

## பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்குக் கடிதம்

வறட்சியினால் மின்சார உற்பத்திக்கான செலவு அதிகரித்துள்ள நிலையில், செலவின சீர்திருத்தக் கட்டணங்களை உடனடியாக மீளாய்வு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என இலங்கை மின்சார சபையினால் பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்டணக் குறைப்பினால் தற்போதும் இலங்கை மின்சார சபை மூவாயிரத்து 300 கோடிரூபா நஷ்டத்துடன், பெரும்நட்டத்தைநோக்கிநகர்ந்துகொண்டிருக்கிறது என சபையின் பொது முகாமையாளர் ஆணைக்குழுவிற்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

வறட்சியினால் நீர்மின் உற்பத்தி வெகுவாக குறைந்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் கடந்த 7ஆம் திகதி வெளியிட்ட முன்னறிவிப்பிற்கமைய, இந்த நிலைமை ஒக்டோபர் மாதம் வரை நீடிக்கலாம் என மின்சார சபை, பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஜனவரி முதல் ஜூலை இறுதி வரை நாளொன்றுக்கு 44.16 ஜிகாவாட் மணிநேரமாக இருந்த மின்சாரத் தேவை ஓகஸ்ட் மாதத்தில் 48.61 ஆக அதிகரித்துள்ளது என மின்சார சபை கூறியுள்ளது.

இதன் பின்னணியில், அனல் மின் உற்பத்திக்கு அதிக செலவு செய்ய வேண்டியுள்ளது என அதன் பொது முகாமையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கக் கொள்கைக்கு அமைய மின்சாரக் கட்டணங்கள் உற்பத்தி செலவிற்குப் பொருந்த வேண்டும் என்பதால், கொள்கை வழிகாட்டுதலின் கீழ் அதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த கடிதத்தின் ஊடாக கட்டணத்தை அதிகரிக்குமாறு கூறவில்லையெனவும் தமது அசௌகரியத்தை தெரிவித்துள்ளோம் என்றும் மின்சார சபையின் பொது முகாமையாளர் ரொஹான் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

கட்டண உயர்வு குறித்து ஆணைக்குழுவே தீர்மானிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டில் பல பகுதிகளில் இடியுடன் கூடிய மழை: 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை

மேல், சப்ரகமுவ, வடமேல் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் பல பகுதிகளிலும் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அத்துடன், நிலவும் பலத்த மழையுடன் கூடிய வானிலையால் 05 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி, களுத்துறை, காலி, கேகாலை மற்றும் கண்டி மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்தின் இங்கிரிய மற்றும் புலத்சிங்கள பிரதேச செயலாளர் பிரிவிற்கும் கேகாலை மாவட்டத்தின் வரக்காபொல பிரதேச செயலாளர் பிரிவிற்கும் இரத்தினபுரி மாவட்டத்தின் எஹலியகொட, குருவிட்ட மற்றும் இரத்தினபுரி பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் இரண்டாம் கட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காலி மாவட்டத்தின் பத்தேகம, நாகொட, எல்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் கண்டி மாவட்டத்தின் உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவிற்கும் களுத்துறை மாவட்டத்தின் வலல்லாவிட்ட, மத்துகம, பாலிந்தநுவர பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் முதலாம் கட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கேகாலை மாவட்டத்தின் யட்டியாந்தோட்டை, புலத்கொஹூபிட்டி, தெஹிஓவிட்ட, தெரணியகல, ருவன்வெல்ல மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தின் கிரியெல்ல, கலவான, அயகம பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் முதலாம் கட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 06.09.2023




முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். மகிழ்ச்சியற்ற மற்றும் பாதுகாப்பற்றதுமான உணர்வு சிறிதளவு காணப்படும். தளர்வாகவும் அமைதி யாகவும் இருப்பது நல்லது.

பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய கடின உழைப்பு வேண்டும். பணியிடத்தில் சில தவறுகள் செய்ய நேரலாம். அதனால் உங்கள் மேலதிகாரிகளின் நன் மதிப்பை இழப்பீர்கள்.

உங்கள் துணையுடன் தொடர்பாடலின் பொழுது பிரச்சினைகள் ஏற்படும். நல்ல மனநிலை இன்று காணப்படாது. எனவே பேசுவதை தவிர்ப்பது உங்களுக்கு நல்லது.

பயனுள்ள வகையில் பணத்தை உங்களால் செல வழிக்க இயலாது. நிறைய பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளைச் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும்.




உங்கள் செயல்களை பொறுமையான முறையில் கையாள வேண்டும். எதிர் மறை விளைவுகளை தவிர்க்க இசை கேட்டல், திரைப்படங்கள் பாரத்தல் போன்ற கேளிக்கை நிகழ்ச்சிகளில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் பணியில் நல்ல தரத்தை நீங்கள் பராம ரிக்க இயலாது. அது உங்களுக்கு கவலையை அளிக்கும் கவனமாக இருக்க வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடன் சில சச்சரவுகள் ஏற்படும். சிறந்த தொடர்பாடல் மூலம் அத்தகைய சிக்கல்களை தவிர்க்க வேண்டும்.

அதிக செலவினங்கள் காணப்படும். தடைகள் காரண மாக ஸ்திரத்தன்மை குறைந்து காணப்படும்.

கண்களில் எரிச்சல் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




உங்கள் சுய வளர்ச்சியில் தடைகள் காணப்படும். அமைதியான அணுகு முறை மிகவும் அவசியம். தியானம் மேற்கொள்வது உங்களுக்கு மிகவும் நல்லது.

உங்கள் பணி உற்சாகப்படுத்தும் வகையில்அமையாது. உங்கள் சக ஊழியர்களிடமி ருந்து தேவையான ஒத்துழைப்பு கிடைக்காது. அது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

மகிழ்ச்சியான மனநிலை காணப்படாது. அதன் காரணமாக உங்கள் துணையிடம் எரிச்சலை வெளிப் படுத்துவீர்கள். அறிவுக்கு பயன்படாத விஷயங்களைப் பேசுவதை தவிரக்க வேண்டும்.

பணம் குறைந்த அளவில் காணப்படும். பணஇழப்புகள் நேர வாய்ப்பு உள்ளது. பணத்தை கையாளும் பொழுது கவனம் தேவை.




உங்கள் சுய முயற்சியின் மூலம் வெற்றி காண்பீர்கள். அதே சமயத்தில் நீங்கள் சில சமயங்களில் திருப்திகர மற்ற நிலையை உணர்வீர்கள். எனவே உயர்ந்த தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்வது நல்லது.

பணியில் பிரகாசிப்பீர்கள். குறித்த நேரத்தில் பணியை முடிப்பீர்கள். பணியை மிகவும் மகிழ்ச்சியுடன் செய்வீர்கள்.

உங்கள் துணையுடனான சந்திப்பும் பயனுள்ள பேச்சு வார்த்தைகளும் மகிழ்ச்சியை அளிக்கும். சந்திப்பின் மூலம் உங்கள் எதிர்காலத்தைப் பற்றி நன்கு திட்டமிடலாம்.

பணவரவு அதிகமாகக் காணப்படும். பயனுள்ள நோக் கங்களுக்காக உங்களின் பணத்தை செலவு செய்வீர்கள்.

ஆரோக்கியம் நன்றாக இருக்கும். ஆரோக்கியத்தில் எந்தவிதமான குறைபாடுகளும் காணப்படாது.




உங்களிடத்தில் நிறைந்திருக்கும் ஆர்வம் காரணமாக செயல்களை விரைவாக செய்து முடிப்பீர்கள். உங்கள் நலனுக்கான பயனுள்ள முடிவுகளை எடுப்பதற்கான போதுமான மன ஆற்றல் உங்களிடம் காணப்படும்.

உங்களிடத்தில் காணப்படும் சிறப்புத் தகுதிகள் காரண மாக உங்கள் பணியை சிறந்த முறையில் ஆற்றுவீர்கள். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கப் பெறுவீர்கள்.

உங்கள் மனதில் உணர்ச்சிப்பூர்வமான எண்ணங்கள் காணப்படும். அவற்றை உங்கள் துணையிடம் வெளிப் படுத்துவீர்கள். உங்கள் நல்லுறவு வளர்வதற்கு அது உதவும்.

நீங்கள் அதிக பணத்தை சேமிக்க முடியும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும். இது உங்களுக்கு திருப்-தியை அளிக்கும்.




உங்கள் கவலை மற்றும் பாதுகாப் பற்ற உணர்வுகளை நீங்கள் கட்டுப்படுத்த வேண்டும். எதிர்மறை எண்ணங்கள் கூடாது. இன்றைய நாள் சாதகமான நாளாக இருக்கும், அதிசயங்களை சாதிப்பேன் என்று நினையுங்கள்.

உங்கள் பணிகளை ஆற்றுவதற்கான தைரியமும் நேர்மறை ஆற்றலும் உங்களிடம் காணப்படும். நீங்கள் மேற்கொள்ளும் பணியில் ஏற்படும் தடைகளை எதிர் கொண்டு சமாளிப்பதற்கு அது உதவும்.

உங்கள் துணையை நம்ப வைப்பது கடினமாக உணர்வீர்கள். கருத்து வேறுபாட்டிற்கான வாய்ப்புகளும் அறிவுப்பூர்வமற்ற விவாதங்களும் காணப்படுகின்றன.

குறைந்த அளவு பணமே காணப்படும். அதிக செல வினங்கள் செய்ய நேரலாம்.




உங்கள் பொறுமை சோதிக்கப் படும். எனவே இன்றைய நாளை திட்ட மிடுங்கள். பிரார்த்தனையில் ஈடுபடுத் திக்கொள்வதும் மந்திரங்களை கேட்ப தும் உங்களுக்கு நல்வழிகாட்டிகளாக அமையும்.

உங்களுக்கு சாதகமான முறையில் நேர்மறை-றயான பலன்கைளப் பெறுவதற்கு நீங்கள் ஒழுங்கான முறையிலே வேலை செய்ய வேண்டும்.

குடும்பப் பிரச்சினை ஒன்றின் காரணமாய் உங்கள் துணையுடன் மோதல் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். நட்பான அணுகுமுறையும் விஷ யங்களை லேசாக எடுத்துக் கொள்வதும் நன்மை தரும்.

தேவையற்ற செலவினங்களை சந்திக்க வேண்-டிய கட்டாயமிருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று சுதந்திரமான மனநிலையில் இருப்பீர்கள். உங்கள் விருப்பங்கள் நிறை வேறும். நீங்கள் எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

உங்கள் பணியில் சாதகமான பலன் கள் கிடைக்கும். உங்கள் திறமைகள் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

இன்று காதல் வயப்பட்ட அணுகுமுறையைக் கொண்டிருப்பீர்கள். உங்கள் காதலை உங்கள் துணை நம்பத்தக்க வகையில் வெளிப்படுத்துவீர்கள்.

பணத்தை பொறுத்த வரை இன்பகரமான நிலை இருக்கும் முக்கியமான முதலீடுகளுக்கான முடிவுகளுக்கு இன்றைய நாளை பயன்படுத்திக்கொள்ளலாம்.

ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். நீங்கள் தேக ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் -06.09.2023




இன்று மறக்க முடியாத நாளாக இருக்கக் காண்பீர்கள். உங்கள் இலக்குகளை அமைத்துக் கொண்டு அதில் வெற்றி காணும் நிலை உரு வாகும்.

பணியிடத்தில் சாதகமான சூழலே காணப்படும். நீங்கள் ஆற்றிய பணிக்காக ஊக்கத் தொகை மற்றும் சலுகைகளைப் பெறுவீர்கள்.

உங்களது நேர்மையான அணுகுமுறை மற்றும் நல்ல புரிந்துணர்வு மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை உருவாக்கமுடியும்.

பணவரவு அதிகமாக இருக்கும். நிதியைப் பொறுத்த அளவில் சுதந்திரமாக இருப்பதற்கான திறனை உங்களால் வளர்த்துக் கொள்ள முடியும்.

நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறை வேறும் வகையில் நீங்கள் செயல்களை செய்யலாம். முக்கியமான முடிவுகள் எடுப்பது இன்று நற்பலன்களைத் தரும்

குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. உங்கள் சகபணியாளர்க ளிடமிருந்து போதுமான ஆதரவு கிடைக்காது. அவர்க ளால் சில சிக்கல்கள் ஏற்படும்.

இன்றைய நாள் காதலுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவதன் காரணமாக சில சிக்கல்கள் நேரும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

குறைந்த அளவில் பணம் காணப்படும். தேவையற்ற செலவினங்களை எதிர்கொள்ள நேரும். திறமையாக பணத்தைக் கையாள வேண்டியது அவசியம். உங்கள் தாயின் உடல்நிலைக்காக பணம் செலவழிக்க நேரும்.




இன்று தன்னம்பிக்கையை வளர்த் துக் கொள்ள வேண்டும். மன எழுச் சிக்கு இடம் அளிக்காதீர்கள். உங்கள் அணுகுமுறையில் தளர்வாக இருங்கள். தியானம் மேற்கொள்வது நல்லது.

பணிகள் கடுமையாகவும் அதிகமாக வும் காணப்படும். அமைதியான முறையில் பணியாற்ற சகபணியாளர்களிடம் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடன் சில கருத்து வேறுபாடுகள் காணப்படும். உங்கள் துணையார் உங்கள் கருத்தை ஒத்துக் கொள்ள மறுப்பு தெரிவிப்பதன் காரணமாய் மகிழ்ச்சி குறையும்.

செலவினங்கள் அதிகமாகக் காணப்படும். வீட்டுப் புணரமைப்பிற்காக அவசியம் செலவு செய்ய வேண்டியிருக்கும்.




விஷயங்கள் உங்களுக்கு சாதகமாக அமைய நல்ல திட்டமிடலும் உறுதியும் கொண்டு செயல்பட வேண்டும். முக்கிய மான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியிடத்தில் சாதகமான சூழலே காணப்படும். குறைந்த நேரத்தில் பணி களை விரைந்து முடிப்பீர்கள். இது உங்கள் மேலதி காரிகளின் கவனத்தை ஈர்க்கும்.

உங்களது நல்ல மனநிலை காரணமாக உங்கள் துணையுடன் நேரம் நல்லவிதமாகக் கழியும்.

உங்களிடம் அதிக அளவில் பணம் இருக்கும். பயனுள்ள நோக்கங்களுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

மகிழ்ச்சியான மனநிலை காரணமாக முழு ஆரோக் கியத்துடன் இருப்பீர்கள்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES | 235+ CONDO PROJECTS | 3500+ CONDO UNITS
KELSEY HOMES 40 Years Housing Excellence
S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS

CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA
CENTRAL PARK JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotiline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co | www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park